நாள் - 18.03.2026

**C.C. No**. 42/2023

**PW** 5-ஆறுமுகம், த/பெ நடராஜ்.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 18th **day of March** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் போலீசார் விசாரணையின் பொழுது சொன்ன விபரத்தை தான் முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் சாரதா பீரித்தா மற்றும் அவரது கணவரை எனக்கு வழக்கு சம்பவத்திற்கு முன்பே தெரியும். என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலம் கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலம் என்றால் சரிதான் . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு முன்பாக கல்லூரியில் பொருத்தப்பட்டிருந்த கேமராக்கள் இருந்தது என்றால் சரிதான். புகார்தாரர் சொல்லித்தான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சிவா துரத்திக் கொண்டு சென்ற பொழுது எதிரியை நான் பார்த்தேன். என்னை போலீசார் விசாரித்த பொழுது எதிரி என்ன கலர் உடை அணிந்து இருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் கருப்பு நிற T Shirt அணிந்திருந்தார் .சத்தம் கேட்டு தான் செயின் பறிக்கப்பட்ட விவரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான் சத்தம் போட்டு வந்து கொண்டிருந்தபோது செயின் பறித்துக் கொண்டு சென்றதை நான் பார்த்தேன்.

2. சம்பவ சமயம் யார் யார் இருந்தோம் என்றால் சிவா துரத்திக் கொண்டு வந்தார் அப்பொழுது நானும் எனது அண்ணனும் பேசிக் கொண்டிருந்தோம். எதிரியின் பெயர் மற்றும் முகவரி போலீசார் சொல்லி தான் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நாங்கள் தான் காவல் நிலையம் அழைத்துச் சென்று ஆஜர் செய்தோம் அதன் பின்னிட்டு போலீசார் எங்களை விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் புகார்தாரர் மற்றும் போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Signature of Witness**

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.18 17:41:20 +0530